Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 681/2025      PW-6**

Name : திரு.முருகானந்தம்
Father / Husband name : சாமிநாதன்
Village : திண்டிவனம்
Age : 53
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 11.05.2026

Accused 1, 4 present. A2, A3 produced from custody through VC. Defence counsel present. APP absent. Witness identified by Tindivanam PS HC 2967 Tr.Manikandan.

**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்ட 4வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. புகாரில் சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் சென்னை பேருந்து நிலையம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் அந்தயிடத்தில் பேருந்து நிலையம் இல்லை, பேருந்து நிறுத்தம் உள்ளது. என்றால் சரிதான். அந்த பேருந்து நிறுத்தத்தில் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடம் என்றால் சரிதான். அந்த பேருந்து நிறுத்தத்தில் போலிஸ் பூத்து, நேரக்காப்பாளர் பூத்து உள்ளது என்றால் போலிஸ் பூத்து இல்லை, நேரக்காப்பாளர் அலுவலகம் உள்ளது. அந்த பேருந்து நிறுத்தத்தில் காவல் நிலையம் சார்பாக ஒரு ஸ்டேன்டு வைத்து கண்காணிக்கப்படும் என்றால் இல்லை. அந்த பேருந்து நிறுத்தம் அருகே காவல்துறை சார்பாக சிசிடிவி கேமரா உள்ளது என்றால் சரிதான், ஆனால் இயங்காத நிலையில் உள்ளது.

2. புகாரில் கடைசி வரியில் பணி செய்யவிடாமல் தடுத்ததாக ஆகாஷ், ராஜேஷ், சேட்டு (எ) பிரதீப்குமார் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது, 4வது எதிரியின் பெயர் சொல்லவில்லை என்றால் சரிதான்,

எனது விசாரணையில் 4வது எதிரியின் பெயர் சொல்லியுள்ளார். எதிரிகள் பயன்படுத்தியதாக சொல்லும் கல்லை நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். புகாரில் கல் என்று சொல்லியுள்ளார், எந்த வகையான கல் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் பொதுபணிப்பதிவேடு, ரோந்துபணிபதிவேடு ஆகியவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகாரில் எதிரிகள் மதுபோதையில் இருந்ததாக சொல்லியுள்ளார், அதனை நிருப்பிக்க 2வது எதிரி ராஜேஷ் என்பவரை மருத்துவ சோதனைக்கு உட்படுத்தவில்லை என்றால் 2வது எதிரி ராஜேஷ் என்பவரை கைது செய்து காவல் நிலையம் அழைத்துச்சென்றபோது அவரை சார்ந்தவர்கள் பிரச்சனை செய்து 2வது எதிரியை அழைத்துச்சென்றுவிட்டார்கள், இதுதொடர்பாக குற்ற எண் 301/2025 வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. மேற்படி விவரத்தை இந்த வழக்கின் இறுதி அறிக்கை மற்றும் எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான், இந்த வழக்கிற்காக சம்மந்தமில்லை என்பதால் சொல்லவில்லை. எதிரிகள் 2, 3, 4 ஆகியோர்கள் குற்ற எண் 301/2025 வழக்கிலும் சம்மந்தப்பட்டுள்ளார் என்றால் சரிதான். குற்ற எண் 301/2025 வழக்கில் எதிரிகள் 2, 3, 4 ஆகியோர்களை கைது செய்து பிரச்சனை ஏற்பட்டதால் உயர் அதிகாரிகள் எந்த காரணத்திற்காக கைது செய்யப்பட்டது என்று கேட்பார்கள் என்று 1வது எதிரியும் சேர்த்து 4 எதிரிகள் மீது பொய்யான இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் அ.சா.1, அ.சா.2 ஆகியோர்கள் என்னுடன் காவல் நிலையத்தில் பணிபுரியும் காவலர்கள் என்றால் சரிதான், அவர்கள் இந்த வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள்.

4. அ.சா.3பிரபாகரன் கண்ணுற்ற சாட்சியாக முன்னிறுத்துப்பட்டுள்ளார், அவரின் பழக்கடை சம்பவயிடத்திற்கு இருப்பதாக வரைபடத்தில் குறிப்பிடவில்லை

என்றால் சரிதான், அதுநடைபாதை கடை என்பதால் குறிப்பிடவில்லை. அ.சா.3 பிரபாகரன் அந்தயிடத்தில் கடை வைத்திருக்கவில்லை, வைத்திருந்தால் நடைபாதை கடை என்று வரைபடத்தில் குறிப்பிட்டிருப்பேன் என்றால் சரியல்ல. அ.சா.4, அ.சா.5 ஆகியோர்கள் சம்பவயிடத்தில் ஆட்டோ ஸ்டேன்டு வைத்திருப்பதாக சொல்லியுள்ளார், ஆனால் சம்பவயிடத்திற்கு அருகே ஆட்டோ ஸ்டேன்டு இருப்பதாக வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், அது ஆட்டோ நின்று செல்லும் இடம். அ.சா.3 பிரபாகரனை எந்த தேதியில், எத்தனை மணிக்கு விசாரித்தேன் என்றால் 10.09.2025 அன்று சம்பவம் நடந்த அன்று விசாரித்தேன், நேரம் வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை. விபத்து பதிவேட்டில் சம்பவம் நேரம் 06.45 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் புகாரில் சம்பவ நேரம் 06.00 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. விபத்து பதிவேட்டில் சம்பவயிடம் மேம்பாலத்திற்கு அருகில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். திண்டிவனம் மேம்பாலம் அமைந்துள்ள நான்கு திசைகளும் சுமார் 2 கிமீ தூரம் இருக்கும் என்றால் சரியல்ல, ஒவ்வொரு திசையும் சுமார் 200 மீ தூரம் இருக்கும். விபத்து பதிவேட்டில் தெரிந்த 4 நபர்கள் கையால் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரர் புகார்கொடுத்துவிட்டு பின்னர் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் சரிதான். இந்த வழக்கு குற்ற எண் 301/2025

என்பதை நிரூபிக்கவேண்டும் என்பதற்காகவும், எதிரி ராஜேஷ் அவர்களை எதற்காக காவல் நிலையம் அழைத்துவந்தேன் என்பதற்காக பதிவு செய்யப்பட்டது இந்த வழக்கு என்றால் சரியல்ல, குற்ற எண் 301/2025 வழக்கில் வீடியோ பதிவு உள்ளது. அந்த வீடியோ பதிவை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.